தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
22.7.2024 (திங்கட்கிழமை)

ஜிப்மரில் காலியாக உள்ள

# 209 பணியிடங்களுக்கு ஆன்லைன் தேர்வு

## செப்டம்பர் 14-ந்தேதி நடக்கிறது

புதுச்சேரி, ஜூலை.22-

புதுச்சேரியில் ஜிப்மரில் காலியாக உள்ள 209 பணியிடங்களுக்கு ஆன்லைனில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

### ஜிப்மரில் குரூப்-பி பணியிடங்கள்

புதுச்சேரி கோரிமேட்டில் உள்ள ஜிப்மர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் குரூப்-பி பிரிவில் நர்சிங் அதிகாரி பதவிக்கு 154 இடங்கள் உள்பட 169 இடங்களும், குரூப்-சி பிரிவில் 24 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் உள்பட 40 பணியிடங்கள் என மொத்தம் 209 பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

மேற்கண்ட பணியிடங்களுக்கு தகுதியான விண்ணப்பத்தாரர்களிடம் இருந்து ஆன்லைனில் *www.jipmer.edu.in.* விண்ணப்பங்கள் பெறப்படுகின்றன.

### விண்ணப்பங்கள் வரவேற்பு

இந்த பணியிடங்களுக்கு அடுத்த மாதம் (ஆகஸ்டு) 19-ந் தேதி மாலை 4.30 மணி வரை விண்ணப்பிக்கலாம். இந்த பணிகளுக்கான ஆன்லைன் தேர்வு செப்டம்பர் 14-ந் தேதி நடக்கிறது. இதற்கான ஹால் டிக்கெட் செப்டம்பர் 2-ந் தேதி முதல் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இதில் ஜிப்மர் நிர்வாக குழுவின் முடிவுப்படி, செவிலியர் அதிகாரி பதவிக்கு குறைந்தபட்சம் 80 பணியிடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்படும்.

மேற்கண்ட தகவலை ஜிப்மர் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

தினமலர்

# ஜிப்மரில் 209 பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு

புதுச்சேரி, ஜூலை 22–

ஜிப்மரில் 154 செவிலியர் அதிகாரி உட்பட 209 இடங்களுக்கு ஆன்லைன் மூலம் விண்ணப்பம் பெறப்படுகிறது.

புதுச்சேரி ஜிப்மர் மருத்துவமனையில் காலியாக உள்ள பணியிடங்கள் நிரப்ப அறிவிப்பு வெளியாகி உள்ளது. அதில், குரூப் பி பிரிவில் நர்சிங் அதிகாரி பதவி 154 இடங்கள் உட்பட 169 இடங்களும், குரூப் சி பிரிவில் 24 இளநிலை உதவியாளர் உட்பட 40 பணியிடங்கள் என, மொத்தம் 209 பணியிடங்கள் நிரப்பட உள்ளது.

இந்த பணியிடங்களுக்கு, ஜிப்மரின் www.jipmer.edu.in இணையதளம் மூலம் வரும் ஆகஸ்ட் 19ம் தேதி தேதி மாலை 4:30 மணி வரை விண்ணப்பிக்கலாம். இந்த பணியிடங்களுக்கான ஆன்லைன் போட்டி தேர்வு செப்., 14ம் தேதி நடக்கிறது. தேர்வுக்கான ஹால் டிக்கெட்செப்., 2ம் தேதி முதல் பதவிறக்கம் செய்து கொள்ளலாம். ஜிப்மர் நிர்வாக குழு முடிவின்படி, செவிலியர் அதிகாரி பதவிக்கு 80 சதவீத இடங்கள் பெண் விண்ணப்பதாரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளதாக ஜிப்மர் தெரிவித்துள்ளது.